மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை
அசல் வழக்கு எண். 55/2019

**2024–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12–ம் நாள் திங்கள் கிழமை** வாதி தரப்பு சாட்சியாகிய PW–1 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) **செல்வி.S. இவாஞ்சலின், இளநிலை உதவியாளர்** என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சத்தியமூர்த்தி (எ) கணேசன் | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : ரத்தினம் | வட்டம் | :வேப்பந்தட்டை |
| கிராமம் | : தழுதாழை | வயது | : 65/2024 |

**3,4,5 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

(i) இதே வழக்கு சொத்து சம்மந்தமாக 3,4 பிரதிவாதிகள் எனக்கெதிராக வேறொரு வழக்கை தாக்கல் செய்து அது இதே நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். தாவா சொத்து எந்த வடிவில் இருந்தது என்றால் சதுரமாக இருந்தது. 12.4 மீட்டர் நீளம், 8.6 மீட்டர் அகலத்தில் இருந்தது. பின்னர் அதை யூ.டி.ஆரின் போது 1996 ம் வருடம் உடைத்துவிட்டனர். யூ.டி.ஆர் திட்டம் கொண்டு வரப்பட்ட வருடம் தெரியுமா என்றால் தெரியாது. யூ.டி.ஆரில் தான் தவறு ஏற்பட்டது. 3,4 பிரதிவாதிகள் தாவா சொத்தில் தகராறு செய்ய முற்பட்ட போது தான் எனக்கு யூ.டி.ஆரில் தவறு ஏற்பட்ட விவரம் தெரியவந்தது. எந்த வருடம் என்றால் எனக்கு தெரியவில்லை. தாவா சொத்தில் உள்ள வீடு பூர்வீகமான சொத்தா அல்லது அரசாங்கத்தால் எனக்கு கொடுக்கபட்ட காலனி வீடா என்றால் காலனி வீடாக முன்பு இருந்தது. அதை இடித்து விட்டு நான் புதியதாக வீடு கட்டியுள்ளேன்.

(ii) வீட்டின் கதவு எண் தெரியுமா என்றால் 2/64 ஆகும். புதியதாக கட்டியுள்ள வீட்டின் அளவுகள் என்ன என்றால் தோராயமாக கிழமேல் 19 அடி, தென்வடல் 37 அடி ஆகும். சொத்தின் அளவும் வீட்டின் அளவும் பிராதில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அவ்வாறு சொல்லவில்லை என்றாலும் சொல்லியதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. புதியதாக கட்டியுள்ள வீட்டை ஒட்டி மேல்புறமாக அமைந்துள்ள நிலம் 4 ம் பிரதிவாதி கீதாவுக்குரியது என்றால் சரியல்ல. 4 ம் பிரதிவாதி அவரது இடத்தில் மாடி படி அமைத்துள்ளேன் என்று கூறி தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எனது வீட்டின் மேல்புறம் என்ன உள்ளது என்றால் காலியிடம் தான் உள்ளது. அந்த 4 ம் பிரதிவாதிக்கு

பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. எனது பட்டாவில் உள்ளது. எனது பட்டாவை ஒட்டி என்ன உள்ளது என்றால் தென்வடல் வீதி உள்ளது.

(iii) புலவரைபடத்தில் தென்வடல் வீதி உள்ளது என்று காட்டப்பட்டுள்ளதா என்றால் பழைய புலவரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது. தற்போதுள்ள புலவரைபடத்தில் இல்லை. பழைய புலவரைபடத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது போல் தென்வடல் வீதி எப்போதும் இருந்தது இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தின் புது சர்வே எண் என்ன என்றால் 241/32 ஆகும். ப.ச.எண்.171 ஆகும். உட்பிரிவு எண் என்ன என்றால் தெரியவில்லை. ச.எண்.241/31 என்பது 4ம் பிரதிவாதி கீதாக்குரியது என்றால் சரியல்ல. மேற்படி சர்வே எண்ணுக்குரிய பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி இடத்தை தான் 4ம் பிரதிவாதி கீதா துரைசாமி என்பவரிடமிருந்து 30.10.2001ம் தேதியில் கிரையம் பெற்றார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. OS.No.19/2023 என்ற வழக்கை தாக்கல் செய்த பின்னிட்டு தான் மேற்படி விவரம் எனக்கு தெரியவந்தது. ச.எண்.241/31 என்பதை துரைசாமி என்பவர் அனுபவித்து வந்தாரா என்றால் இல்லை. துரைசாமி தான் அனுபவித்து வந்தார் என்றாலும் பெரியசாமி வகையறா என்பவர்கள் இடையூறு செய்தததால் அவர் OS.No.88/1997 என்ற வழக்கை தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

(iv) மேற்படி துரைசாமி மேற்படி இடத்தை ராஜன் என்பவரிடமிருந்து கிரையம் பெற்று அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. மேற்படி இடம் 21x21 அடி அளவு ஆகும் என்றால் சரியல்ல. ச.எண்.241/31 21x21 அடி அளவை 4ம் பிரதிவாதி கீதா இதுநாள் வரை அனுபவித்து வருகிறார் என்றாலும் அதில் எனக்கு எந்த உரிமையும் அனுபவமும் இல்லை என்றாலும் சரியல்ல. தாவா சொத்தின் இயற்கை தன்மையை அறிய ஆணையரை நியமிக்க கோரி மனு தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்தேன் அது தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. ச.எண்.241/32 எனது தாயாருக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் அவருக்கு தந்தை வழி சொத்தாக கிடைக்கப்பெற்றது. அதற்கு அத்தாட்சியாக ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது தாத்தா பெயரில் இருந்தது என்பதற்கு ஆதரவு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது அம்மா பெயரில் பட்டா தாக்கல் செய்துள்ளேன் . அதன் அளவு தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. ச.எண்.241/31

ப.சஎண்.171/2–ற்கு ராஜன் என்பவர் பெயரில் நீண்டகால அனுபவம் பாத்தியம் பத்திரம் அரசாங்கத்தால் 1992ம் ஆண்டிலேயே வழங்கபட்டுவிட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

v) ச.எண்.241/32 மட்டுமே எனக்குரியது என்றாலும், ச.எண்.241/31 4ம் பிரதிவாதி கீதாவுக்குரியது என்றாலும் அவரது அனுபவத்தை அனுசரித்து அரசாங்கம் அவரது பெயரில் பட்டா வழங்கபட்டது என்றாலும் சரியல்ல. தாவா சொத்தின் நீள அகலத்தை பிராதில் குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் இல்லை. பிராதில் எனக்கு உரிமை உள்ள சொத்தின் அளவையோ நான் அனுபவித்து வரும் சொத்தின் அளவையோ நான் பரிகாரம் கோரும் சொத்தின் அளவையோ குறிப்பிட்டு கூறாததால் தாவா தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதிக்குரிய ச.எண்.241/31ல் எனக்கு எந்தவித உரிமையும், அனுபவமும் இல்லை என்றாலும், தாவா தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.